1978 செப்டம்பர் 11]

Hill Allowances for teachers in Cumbum Range.

* Q. No. 134—THIRU K. KANDASAMY : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the teachers working in the aided Schools are demanding Hill Allowance and Winter Allowance for working in hill stations such as "Pachaikkomachi Hills" or Manalaru, Megamalai, Evamgallar, Maharajamettu and Venniyar in Cumbum Range, Madurai district; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ;

(அ) ஆம்.

(ஆ) மலைப்படியும், குளிர்காலப்படியும் குறிப்பிடப்பட்ட பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

பொது நூலகங்களுக்குப் புத்தகங்கள்

* வின எண் 135—திரு. பேர. கோபாலன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிடும் நூல்கள் எல்லா பொது நூலகங்களிலும் இருக்குமாறு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1975 ம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடுகளில், ஒன்பது தலைப்புகளில், 2,300 படிகள், ரூ. 20,817·30 செலவில் வாங்கி பொது நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகம் மற்றெல்லாப் பல்கலைக் கழகங்களைப் போல் நூல்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையில் 25% தள்ளுபடி தர முன் வராததால், 1975க்கு மேல் இவ்வெளியீடுகளை வாங்க இயலவில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் தற்போது உரிய தள்ளுபடி தர ஒப்புக்கொண்டு உள்ளதால், இனிமேல் இப் பல்கலைக் கழக வெளியீடுகளும் பொது நூலகங்களில் இருக்குமாறு செய்ய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. பேர. கோபாலன் : தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்படும் நூல்கள் அழகாக இருந்தாலும் இதன் விலைகள் அதிகமாக இருப்பதால் தனிப்பட்டவர்கள் இதை வாங்கிப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே இவற்றின் விலையைக் குறைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?